பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
17 03 2025 **MONDAY 6.30 PM**
மாநிலச் செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- நியூசிலாந்துடன் பாதுகாப்பு ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவதென தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

- மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக மின் பற்றாக்குறை களையப்பட்டுள்ளதாக அத்துறைக்கான இணையமைச்சர் திரு ஸ்ரீபத் நாயக் தெரிவித்துள்ளார்.

- டாஸ்மாக் ஊழலுக்கு எதிராக போராட்டம் நடத்த முயன்ற பிஜேபி நிர்வாகிகளை திமுக அரசு கைது செய்திருப்பது வன்மையாக கண்டிக்கத்தக்கது என்று மத்திய இணையமைச்சர் திரு எல். முருகன் கூறியுள்ளார்.

- டாஸ்மாக் ஊழலுக்கு எதிரான போராட்டம் தொடரும் என்று பிஜேபி மாநிலத்தலைவர் திரு அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

- Nicosia மகளிர் கிராண்ட்பிரிக்ஸ் செஸ் போட்டியின் இரண்டாவது சுற்றில் இந்தியாவின் திவ்யா தேஷ்முக் மற்றும் Harika Dhronavalli பங்கேற்ற ஆட்டங்கள் டிராவில் முடிவடைந்தன.

*--- இனி விரிவான செய்திகள் ---*

<<<<<<<>>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடி, நியூசிலாந்து பிரதமர் திரு Christopher Luxon இடையேயான பேச்சுக்கள் இன்று புதுதில்லியில் நடைபெற்றன.

பின்னர், இருவரும் கூட்டாக செய்தியாளர்களிடம் பேசினர்.

இருநாடுகளுக்கு இடையேயான உறவை மேலும் வலுப்படுத்துவது குறித்து விரிவாக பேச்சு நடத்தப்பட்டதாக திரு நரேந்திர மோடி கூறினார்.

பாதுகாப்புத்துறையில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவதென பரஸ்பரம் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இருநாடுகளுக்கு இடையேயான தடையற்ற வர்த்தக பேச்சுக்களை தொடங்குவது என்ற முடிவு, வர்த்தக உறவுகளை வலுப்படுத்திட உதவும் என்றும் அவர் தெரிவித்தார்.

நியூசிலாந்தில் இந்தியர்களுக்கு எதிராக நடைபெற்ற போராட்டம் குறித்து தமது கவலையை நியூசிலாந்து பிரதமரிடம் தெரிவித்ததாகவும் திரு நரேந்திர மோடி கூறினார்.

இதுபோன்ற சம்பவங்கள் மீண்டும் நடைபெறாமல் இருப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று நியூசிலாந்து பிரதமர் உறுதி அளித்ததாகவும் அவர் கூறினார்.

தீவிரவாதத்தை முற்றிலும் ஒடுக்க வேண்டும் என்பதில் இரு நாடுகளும் ஒரே நிலைப்பாட்டை கொண்டிருப்பதாகவும் திரு நரேந்திர மோடி தெரிவித்தார்.

இந்தியாவுடனான உறவை மேலும் வலுப்படுத்த விரும்புவதாக நியூசிலாந்து பிரதமர் கூறினார்.

இந்தியா – நியூசிலாந்து இடையே கல்வி, பாதுகாப்பு உள்ளிட்ட துறைகளில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கான ஐந்து ஒப்பந்தங்களும் இன்று கையெழுத்தாயின.

<<<<<<<>>>>>

டாஸ்மாக் ஊழலுக்கு எதிராக முற்றுகை போராட்டம் நடத்த முயன்ற பிஜேபி-யினரை காவல்துறையினர் கைது செய்தனர்.

சென்னையில் டாஸ்மாக் அலுவலகத்தை முற்றுகையிட செல்வதற்காக புறப்பட்ட பிஜேபி மாநிலத்தலைவர் திரு அண்ணாமலையை காவல்துறையினர் கைது செய்தனர்.

அப்போது செய்தியாளர்களிடம் பேசிய அவர், திமுக அரசின் இதுபோன்ற அடக்குமுறை நடவடிக்கைகளுக்கு பிஜேபி அஞ்சாது என்று குறிப்பிட்டார்.

ஆயிரம் கோடி ரூபாய் டாஸ்மாக் ஊழலுக்கு எதிரான போரட்டம் தொடரும் என்றும் அவர் கூறினார்.

போராட்டம் நடத்த முயன்ற பிஜேபி நிர்வாகிகள் மற்றும் கட்சியினரை காவல்துறையினர் தடுத்து நிறுத்தி கைது செய்திருப்பது கண்டிக்கத்தக்கது என்றும் திரு அண்ணாமலை தெரிவித்தார்.

இதற்கிடையே, டாஸ்மாக் ஊழலுக்கு எதிராக போராட்டம் நடத்த முயன்ற பிஜேபி நிர்வாகிகளை திமுக அரசு கைது செய்திருப்பது வன்மையாக கண்டிக்கத்தக்கது என்று மத்திய இணையமைச்சர் திரு எல். முருகன் கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் விடுத்துள்ள அறிக்கையில் இதனை தெரிவித்துள்ள அவர், டாஸ்மாக் துறையில் நடைபெற்றுள்ள பல்லாயிரம் கோடி ரூபாய் ஊழல் நாடு முழுவதும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளதாக கூறியுள்ளார்.

இந்த ஊழலை தமிழக மக்களிடம் எடுத்துச்சென்று பிஜேபி உண்மையை அம்பலப்படுத்தி வருவதாக அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

இதனால் ஆத்திரம் அடைந்துள்ள திமுக அரசு பிஜேபி-யினர் மீது வன்முறையை ஏவி வருவதாகவும் திரு எல். முருகன் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், டாஸ்மாக்குக்கு எதிரான பிஜேபி-யின் போராட்டத்தை வரவேற்பதாக விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் திரு தொல். திருமாவளவன் கூறியுள்ளார்.

சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மதுபானக்கடைகளை ஒழிக்க வேண்டும் என்பதுதான் தங்களது கட்சியின் நிலைப்பாடு என்றார்.

இதற்காக யார் குரல் கொடுத்தாலும் அதனை விடுதலை சிறுத்தைகள் கட்சி வரவேற்கும் என்று அவர் தெரிவித்தார்.

தேர்தல் நேரத்தில் அளித்த வாக்குறுதியின்படி, திமுக அரசு மதுக்கடைகளை மூட தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் திரு தொல். திருமாவளவன் கூறினார்.

ஆயிரம் கோடி ரூபாய் டாஸ்மாக் ஊழல் தொடர்பாக பிஜேபி-யினர் முற்றுகை போராட்டம் நடத்துவதற்கு முன்னர், அக்கட்சியின் மாநில தலைவர் திரு அண்ணாமலை உள்ளிட்டோரை கைது செய்திருப்பது கண்டிக்கத்தக்கது என்று பாமக தலைவர் திரு அன்புமணி ராமதாஸ் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், ஊழலுக்கு எதிரான போராட்டங்களை கண்டு காவல்துறையும், அரசும் அஞ்சுவது ஏன் என்று வினவியுள்ளார்.

தமிழகத்தில் ஊழலுக்கு எதிராக ஜனநாயக முறையில் போராடுவதற்குகூட அனுமதியில்லையா என்று அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

திமுக-வினர் ஊழல் செய்யவில்லை என்றால், இத்தகைய அடக்குமுறைகளை கைவிட்டுவிட்டு, டாஸ்மாக் ஊழல் குறித்து சிபிஐ விசாரணைக்கு உத்தரவிட வேண்டும் என்றும் திரு அன்புமணி ராமதாஸ் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

<<<<<<<>>>>>

மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக மின் பற்றாக்குறை களையப்பட்டுள்ளதாக அத்துறைக்கான இணையமைச்சர் திரு ஸ்ரீபத் நாயக் கூறியுள்ளார்.

இன்று மாநிலங்களவையில் கேள்விநேரத்தின்போது இதனை தெரிவித்த அவர், மின் பற்றாக்குறை என்ற நிலையிலிருந்து மாறி, மின் மிகை நாடாக இந்தியா உருவெடுத்துள்ளது என்று குறிப்பிட்டார்.

தேசிய மின் விநியோக கட்டமைப்பை ஏற்படுத்தியதே இதற்கு முக்கிய காரணம் என்றும் திரு ஸ்ரீபத் நாயக் கூறினார்.

<<<<<<<>>>>>

தூத்துக்குடி மாவட்டம் குலசேகரப்பட்டினத்தில் அமைக்கப்பட்டுவரும் ஏவுதளத்திலிருந்து அடுத்த 24 மாதங்களுக்குள் சிறிய செயற்கைக்கோள் விண்ணில் செலுத்தப்படும் என்று இஸ்ரோ தலைவர் திரு நாராயணன் கூறியுள்ளார்.

சென்னை ஐ ஐ டி—யில் இஸ்ரோவுடன் இணைந்து அமைக்கப்பட்டுள்ள ஆய்வு மையத்தை திறந்துவைத்த பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

500 கிலோ எடைகொண்டதாக இந்த செயற்கைக்கோள் இருக்கும் என்றும் திரு நாராயணன் தெரிவித்தார்.

<<<<<<<>>>>>

தூத்துக்குடி அனல்மின் நிலையத்தில் மூன்று மாதத்திற்குள் மீண்டும் உற்பத்தியை தொடங்குவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக்கழக மேலாண் இயக்குனர் திரு ஆல்ஃபி ஜான் வர்கீஸ் கூறியுள்ளார்.

இந்த அனல்மின் நிலையத்தில் தீ விபத்தால் சேதமடைந்த பகுதிகளை ஆய்வு செய்த பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

*(சவுண்ட் பைட் - ஆல்ஃபி ஜான் வர்கீஸ் - 50 செகண்ட்ஸ்)*

<<<<<<<>>>>>

கரூரில் மாபெரும் குதிரை ரேக்ளா பந்தயம் இன்று நடைபெற்றது.

கரூர், திருச்சி, கோவை, தேனி, புதுக்கோட்டை உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களை சேர்ந்த குதிரைகள் இதில் பங்கேற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(சவுண்ட் பைட் - பாலகிருஷ்ணன் - 43 செகண்ட்ஸ்)*

<<<<<<<>>>>>

*மாவட்டச் செய்திகள்*

நாமக்கல் மாவட்டத்தில் பொதுமக்கள் குறைதீர் கூட்டம் ஆட்சியர் திருமதி உமா தலைமையில் இன்று நடைபெற்றது.

-----------------

ராணிப்பேட்டை மாவட்டத்தில் சட்டம் - ஒழுங்கு மற்றும் சாலை பாதுகாப்பு குறித்த மாதாந்திர ஆய்வுக்கூட்டம் ஆட்சியர் திருமதி சந்திரகலா தலைமையில் இன்று நடைபெற்றது.

------------------

தென்காசி மாவட்டத்தில் குழந்தைகளுக்கு வைட்டமின் “ஏ” திரவம் வழங்கும் முகாமை ஆட்சியர் திரு கமல் கிஷோர் இன்று தொடங்கிவைத்தார்.

-----------------

காஞ்சிபுரம் மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கு உகந்த கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவது குறித்த பயிற்சியினை ஆட்சியர் திருமதி கலைச்செல்வி மோகன் தொடங்கிவைத்தார்.

------------

திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி அருகே அரசு பேருந்தில் கடத்தி செல்லப்பட்ட 11 கிலோ போதைப்பொருளை காவல்துறையினர் பறிமுதல் செய்தனர். இதுதொடர்பாக இரண்டு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

-----------------

தருமபுரியில் பெண் குழந்தைகளை காப்போம் - அவர்களுக்கு கற்பிப்போம் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி இன்று நடைபெற்றது.

--------------

தூத்துக்குடி மாவட்டம் திருச்செந்தூர் அருகே இலங்கைக்கு கடத்த முயன்ற ஒரு கோடி ரூபாய் மதிப்பிலான பீடி இலைகளை காவல்துறையினர் பறிமுதல் செய்தனர்.

<<<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

Nicosia மகளிர் கிராண்ட்பிரிக்ஸ் செஸ் போட்டியில் இந்தியாவின் திவ்யா தேஷ்முக் மற்றும் Harika Dhronavalli பங்கேற்ற ஆட்டங்கள் டிராவில் முடிவடைந்தன.

சைப்ரசில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் இரண்டாவது சுற்றில் திவ்யா தேஷ்முக் - உக்ரைனின் Mariya Muzychuk இடையேயான ஆட்டமும், Harika Dhronavalli - கிரீஸின் Stavroula Tsolakidou இடையேயான ஆட்டமும் டிராவில் முடிவடைந்தது.

------------------

இங்கிலாந்தில் நடைபெற்றுவரும் உலகக்கோப்பை கபடி போட்டியின் ஆடவர் பிரிவில் இந்தியா தற்போது இத்தாலியை எதிர்த்து ஆடிவருகிறது.

----------------

காவல்துறையினருக்கான தேசிய துப்பாக்கிச்சுடும் போட்டி சென்னையில் இன்று தொடங்கியது.

<<<<<<<END>>>>>